# வெள்ளி

மாதம் இருமுறை
NEWS MAGAZINE



அசைக்க முடியாத நிலையில் இருக்கிறார் கருணாநி

'வரதர்' எழுதும் பயணக் கட்டுரை

1-6-72

30 சத

## குடியரசு தின வாழ்த்து!

இலங்கையை ஒரு குடியரசு நாடாக்கி, பூரண சுதந்திரத்தையும் அதன் பலன்களையும் முழு நிறைவாக அனுபவிக்கும் தகைமைபெற்ற எமது சிங்களச் சகோதரர்களுக்கு மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் !

# அவசியம்! அவசரம்!

இலங்கை 'குடியரசு' ஆகிவிட்டது;

அன்னிய ஆட்சியிலிருந்து முற்று முழுதான விடுதலை!

ஆனல்—

இந்த நாட்டின் இரண்டாவது பெரிய இனமான தமிழ் மக்கள் தங்களுக்குப் பூரண விடுதலை கிடைக்கவில்லை—நியாயமான உரிமைகள் கிடைக்கவில்லையென்பதை, குடியரசு தினத்தன்றே பகிரங்கமாக அமைதியான முறையில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இந் நிலையில்—

இலங்கை முழுவதுக்கும், எல்லாமக்களுக்கும் பூரண விடுதலை கிடைத்திருக்கிறது என்று சொல்லி விடமுடியாது.

நாட்டின் இரண்டாவது பெரிய இனத்தின் அதிருப்தியோடு—நாட்டை ஆளுவது பிரதமருக்குப் பெருமை தரக்கூடிய விஷயமுமல்ல;

' தவறுகள் இருந்தால் இன்னமும் திருத்திக் கொள்வோம்.' என்று குடியரசு தினத்தில் ஆட்சியாளரிடமிருந்து ஒரு குரல் எழுந்திருக்கிறது. அந்தக் குரல் விரைவில் செயல்படவேண்டும்!-அப்போதுதான் நாடு முழுவதிலும் உண்மையான குடியரசு மலரும்!

"தமிழ்வாணன் அடுத்துத் தயாரிக்கும் படத்திலும் நான்தான் கதாநாயகி" என்று கூறிக் கொண்டிருக்கிறார் புது முகம் கவிதா. ஆங்கிலோ இந்தியப் பெண்ணான இவர், ஆபாச



மாக, எப்படி வேண்டுமானாலும் நடிக்கத் தயாராக இருக்கிறார். தமிழ்வாணனின் முதல் தயாரிப்பான 'காதலிக்க வாங்க'வில் கவிதாதான் கதாநாயகியாக நடித்தார். படம் தோல்விகண்டு விட்டது. அடுத்து ஒரு படத்தை எடுக்க தமிழ்வாணன் துணிவாரா என்பது தெரியவில்லை.

யூ. என். பி. ஆட்சிக் காலத்தில் நிதிமந்திரியாக இருந்த வன்னிநாயக்கா மிகவும் எளிமையான மனிதர். எந்தவிதமான துவேஷ மனப்பான்மையும் இல்லாதவர். குருநாகல் மாவட்டத்தில் இவருக்கு அபாரமான செல்வாக்கு உண்டு. இந்தச் செல்வாக்குக்குக் காரணம் இவரது அற்புதமான குண நலன்கள்தான். எல்லாக் கட்சி அரசியல்வாதிகளுமே இவருடன் அன்பாகவும் மரியாதையாகவும் தான் பழகுகிறார்கள். அரசியலைச் சொந்தலாபத்துக்குப் பயன்படுத்தாத ஒருசில அரசியல்வாதிகளுள் குறிப்பிடத் தகுந்தவர் இவர்!

யாழ். மாநகரசபையிலுள்ள ஒரே ஒரு பெண் உறுப்பினர் திருமதி அந்தோனியா சுவாமிநாதர். தமிழ் காங்கிரஸ் கட்சியின் பெயரால் இவர் மாநகர சபை உறுப்பினராக இருந்த போதிலும், கட்சிப் போட்டி மனப்பான்மைகளை கடந்த ஒரு சிறந்த முற்போக்கு வாதியென்பதை சமீபத்தில் இவர் விடுத்த ஒரு அறிக்கையிலிருந்து தெரிந்து கொள்ளலாம். தமிழர்கள் அனைவரும் ஒரே அணியில் திரள வேண்டும் என்று விரும்பும் இவர், "ஜனநாயக ரீதியில் அமைக்கப்பட்ட இன்றைய அரசாங்கத்தின் முற்போக்கு நடவடிக்கைகளை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், தமிழ் மக்கள் தன்மானமிழக்கக்கூடிய விஷயங்களுக்கு மறுப்புத் தெரிவிக்கிறேன்!" என்று கூறியிருக்கிறார்.

சிங்கள வாசகர்களிடையே மிகவும் பிரபலமானது "அத்த" என்ற தினசரிப் பத்திரிகை! சென்ற தேர்தலில் ஐக்கிய முன்னணியினர் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்த சக்திகளில் இந்தப் பத்திரிகையே முதலிடம் வகித்தது! கம்யூனிஸ்ட் கட்சிக்குச் சொந்தமானது இந்தப் பத்திரிகை! சென்ற மாதத்தில் சில தினங்கள் இந்தப் பத்திரிகை வெளிவராமல் இருந்து மறுபடியும் இப்போது வெளிவரத் தொடங்கியிருக்கிறது! கம்யூனிஸ்ட் கட்சிக்குள் நடந்துவரும் கருத்துப் போராட்டம்தான் இதற்குக் காரணம்!

'வெள்ளி' மே இதழ் மேலட்டையில் எம். ஜி. ஆர். படம் வெளிவந்தது. தொடர்ந்து சில நாட்களுக்குள்ளாகவே, எம். ஜி. ஆர். அகில இந்தியச் சிறந்த நடிகராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர். உங்களுக்கு முன்கூட்டியே ஏதாவது தெரியுமா?— என்று ஒரு அன்பர் எழுதியிருக்கிருர், எம். ஜி. ஆருக்குக் கிடைத்த கௌரவம் குறித்து வேறு பல அன்பர்களும் மிகுந்த மகிழ்ச்சி தெரிவித்து எமக்குக் கடிதம் எழுதியிருக்கிருர்கள். 'வெள்ளி' க்கும் மிக்க மகிழ்ச்சி!



☛ தமிழ்ப் பிரதிநிதிகள் ஆட்சி மன்றத்தைத் துறக்க வேண்டுமென்று துடிப்புள்ள இளைஞர்கள் பலர் கேட்டிருக்கிருர்கள். இந்த விஷயத்தில் மிகவும் சிந்தித்துச் செயல்பட வேண்டும். ஒரு பெரியபோராட்டத்துக்குத் துணிந்து, தயாராகிவிட்டால் மட்டுமே ஆட்சி மன்றத்தைப் பகிஷ்கரிக்க வேண்டும். இல்லையேல், அடுத்து வரும் தேர்தல் மூலம் சில சுயநலமிகள் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக ஆட்சி மன்றத்தில் இடம் பெற்றுவிடக் கூடும்! அதே நேரத்தில், தமிழ் மக்களின் கருத்துக்களை ஆட்சி மன்றப் பேச்சுக்கள் மூலம் உலகறியச் செய்யும் வாய்ப்பையும். பேச்சு வார்த்தைகள் மூலம் சாதிக்கக்கூடிய சிறு விஷயங்களைச் சாதிக்கும் வாய்ப்பையும். சூழ்நிலை கைகூடி வருமானுல் ஆட்சியாளரின் அனுசரணையுடன் உரிமைகளைப் பெறும் வாய்ப்பையும் இழக்க நேரிடும். —கடைசியாக கிடைத்த செய்தியின்படி பதவி துறப்பது பற்றிய தீர்மானத்தைப் பிற்போட்டிருக்கிருர்களென்று தெரிகிறது. சரியான, விவேகமான தீர்மானம்!

## அடுத்த இதழ் 15–6–72

கலாநிதி க. கைலாசபதி 'மண்ணுலகத்து ஓசைகள்'

'சுகுமாரன்' ... ... ... ... ... ... ... ... ... ... ... வெள்ளிக்கதை

க. குகதாசன் ... ... ... ... ... ... ... ... ... ... அறிவுக்கட்டுரை

.......................... 'வரதர்' ... ... ... பயணக்கட்டுரை


நம்பிக்கை நாணயம் மிக்க
தங்க, வைர
நகைகளுக்கு
ராணி
ஆபரண மாளிகை
224, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

# மறக்கமுடியாத கவிஞர்

★ ★ ★ இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன்

* இரண்டு காலும் வழங்காது இடர்ப்படும் நிலையில்...

மூன்று சில்லு சைபிக்கிளில் கல் தெருவிலும் கனவேகத்தில் ஓடும் கவிஞர்.

* வாயால் பேச முடியாத நிலையில்...

ஏதோ உற்சாகத்தில் திக்கித் திணறித் தன் உள்ளுணர்வுகளை வெளிப்படுத்தும் கவிஞர்.

* காது அதிகம் கேளாத நிலையில்...

வாயசைவைக் கொண்டே கிரகித்துக் கொள்ளும் கவிஞர்.

* குலதெய்வமாகிய நாகபூஷணியை வணங்கிக் கொண்டே, சாயிபாபாவைக் கண்கண்ட கடவுளாகப் போற்றும் கவிஞர்.

* ஆயுள் வேதத்தில் டாக்டராகப் பரீட்சையில் சித்தியெய்தி அருமையாக வைத்தியம் செய்யும் கவிஞர்.


அவர்தான் நயினைகவி ஆ. இராமுப்பிள்ளை. அதிசயக் கவிஞர் அவர். அன்புக்குரிய கவிஞர் அவர். கருவிலே திருவுடைய கவிஞர் அவர்.

1972ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் நாள் மணிபல்லவம் (நயினாதீவு) கலாமன்றத்தாரின் பத்தாவதாண்டு நிறைவு விழாவில் சொற்பொழிவு செய்யும் ஒருவாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இரவு எட்டுமணிக்குக் கோலாகலமாகத் தொடங்கிய அந்தத்தமிழ் விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகள் விடிய நான்கு மணிக்கே முடிவடைந்தன.

விழாவினை நடாத்திய உற்சாகம் மிக்க வாலிபர்கள், அநேகமாக உத்தியோகத்தில் அமர்ந்திருப்போர். பந்தல் அமைத்தது முதல் பரத நாட்டியக் கச்சேரிவரை சிறப்புறச் செய்திருந்தனர். சிறப்பினும் சிறப்பாகக் கோமுகி என்னும் பெயரில் அருமையான மலர் ஒன்றினையும் வெளியிட்டனர்.

விடிந்தது. அலுப்புமிகுதியாக இருந்தாலும், விரைந்து மோட்டார்ப்படகைப்பிடித்துப் பஸ்ஸில் ஏறி வீடுசேரவேண்டிய தேவை இருந்தாலும், கவிஞர் இராமுப்பிள்ளையைக் காண என் மனம் துடித்தது.

சென்ற முப்பத்தைந்து வருடங்களுக்கும் மேலாக அவர் பெயரைக் கேள்வியுற்றிருக்கிறேன், அவர்பாடிய அருமை



ஒரு கவிதைத் தொகுதி, அதனை அடுத்து கலாநிதி சிவத்தம்பியின் ஒரு கட்டுரைத் தொகுதி, பின்னர் ஒரு நாவல். அதற்குப் பின்னர் ஒரு சிறுகதைத் தொகுதி - இப்படி மளமளவென்று தொடர்ச்சியாக சில புத்தகங்களை வெளியிடத் தீர்மானித்து இருக்கிறார் எழுத்தாளர் டொமினிக் ஜீவா! ஒரு காரியத்தில் ஈடுபட்டுவிட்டால் அதில் வெற்றி கிடைக்கும் வரை ஓயாது உழைப்பது இவரிடமுள்ள சிறப்பு!

---

யான பாடல்களைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறேன். ஆனால் நேரில் அவரைச் சந்திக்கும வாய்ப்புத்தான் எனக்குக் கிட்டவில்லை.

1934-35ஆம் வருடத்தில் நயினாதீவு தெற்கில் உள்ள கணேச வித்தியாசாலையில் படிப்பிக்கும் பேறு எனக்குக் கிடைத்தது. அப்போது என்னுடன்படிப்பித்த ஆசிரிய நண்பரொருவர் ஈழகேசரிப்பத்திரிகையில் வெளிவந்த கவிதை ஒன்றை எனக்குக் காட்டினார். ''காலிமுகக் களரியெனும் கால்பேஸின் கவினையிங்கே கவியாற் கூற'' என்று தொடங்கும் கவிதை அது. நயினாதீவில் இருக்கும் இளங்கவிஞர் இராமுப்பிள்ளை பாடிய கவிதை என்றும் அன்பர் சொன்னார். 'காலிமுகக் களரி'ப்பாடல் எனக்குப் பிடித்திருந்தது.

அன்று தொடக்கம் அவர் மேலே எனக்கு ஒரு கண். அவர் பாடிய பல பாடல்களைச் சேகரித்தும் வைத்திருந்தேன். எனது மகள் பராசக்தியின் நினைவாக நான் வெளியிட்ட ஈழத்துக்கவி மலர்கள் என்ற நூலிலும் கவிஞர்பாடிய ''கதிர்காமம் சென்ற வண்டே'' என்ற கவிதையைச் சேர்த்திருந்தேன்.

அன்பர்கள் சிலர் அவருடைய தேக நிலைமையைப்பற்றிக் கூறினார்கள், நானே அவரைச் சென்று காண்பதாகக் கூறினேன். அன்பரொருவர் தாமே அவரை அழைத்து வருவதாகக் கூறிச்சென்றார்.

கவிஞர் தமது மூன்றுசில் உள்ள பைசிக்கிலில் வந்து இறங்கினார். இறங்கினார் என்ற சொல்லை எழுதிவிட்டேன். ஆனால்...

அவர் என்னைப்பார்த்தார். நான் அவரைப்பார்த்தேன். பத்து நிமிடம் வரை இருவருமே பேசவில்லை. ஏனோ? எனது தேக நிலையைப்பார்த்து அந்த வைத்தியசிகாமணி பரிதாபப்பட்டாரோ என்னவோ!

அன்பர்கள் எங்கள் மௌனத் நிலையைக் கலைத்துப் பேசவைவனதார்கள். அவர் கூறிய தகவல்கள் அதிசயத்திற்குமேல் அதிசயமாகவே இருந்தன.

° 1914 ஆம் ஆண்டிலே பிறந்தேன். பிறக்கும் போதே இந்த முடமான நிலை எனக்கு ஏற்படவில்லை. எஸ். எஸ். சி. சித்தியடைந்து ஆயுள்வேதக் கல்லூரியில் சேர்ந்து வைத்தியப்பட்டமும் பெற்றேன். விவாகம் செய்தவன் நான். ஆனால் மனைவியிறந்துவிட்டார். பன்னிரண்டு வயது முதலேபாடத் தொடங்கிவிட்டேன். யாப்பு அணி ஒன்றும் அதிகமாகத்தெரியாது. ஆனால் எஸ். எஸ். சி படித்த அறிவைக் கொண்டே பாடிக் கொண்டிருக்கிறேன். நயினாதீவு இயற்கையாகவே கவிஞர்களுக்குரிய மண். காலிமுகக் களரி என்

பதுதான் முதன் முதல் பத்திரிகையில் வெளிவந்த பாடல்.

1950ஆம் ஆண்டிலேதான் இந்த முடமான நிலைவந்தது. என்றாலும் நான்சோர்வடையவில்லை. இதுவரை ஈராயிரம் பாடல்களுக்கு மேல் பாடியிருக்கிறேன். ஒரே ஒரு சிறியநூல் தான் வெளியிட்டேன். நாகபூஷணியின் திருவோலக்கக் காட்சியும் அவள் மாட்சியும் என்பது நூலின் பெயர். அதில் முப்பது முப்பத்திரண்டு பாடல்கள் உள்ளன.

'கதிர்காமம் சென்றவண்டே' என்ற பாடலைக்குறிப்பிட்டு நான் உரையாடினேன். அவர் அதற்கு அந்தக் கஷ்டமானநிலையிலும் தான் கதிர்காமம் சென்ற வரலாற்றையும், கால் நிலத்தில் ஊன்ற முடியாத நிலையிலும் ஏதோ ஆவேசத்தில் காவடி எடுத்து ஆடியகதையையும் உணர்ச்சிமிகுதியோடு கூறி அந்தப் பாட்டுப்பிறந்த கதையையும் கூறினார்.

கவிஞர் தாம் சாயிபாபா மேல் பாடிய ஒரு கவிதையை (துண்டுப் பிரசுரமாக அச்சிட்ட கவிதையை) என்னிடம் நீட்டியபடியே ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் சாயிபாபா பஜனை செய்வதுண்டென்றும் கூறினார். 'கண்கண்ட தெய்வமாக நாகபூஷணியம்மையிருக்க...' என்று நான் தொடங்கியதுதான் தாமதம் தமது இக்கட்டான ஒரு நிலையில் சாயிபாபாவைத்துதிக்க அவர் அருளிய பெருமையைக் கவிஞர்கூறிச் சாயிபாபா கண்கண்ட உடன்பலன் தருகின்ற கடவுளே என்றார்.

மணிபல்லவக்கலாமன்றத்தினர் 1969இல் கவிஞருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர். விரைவில் அவரது கவிதை நூல் ஒன்றை வெளியிடவும் உள்ளனர் என்பதை அவர் கூறக் கேட்டு ஆறுதலடைந்தேன்.

மோட்டார்ப்படகு புறப்பட ஆயத்தம் என்கிறார்கள் அன்பர்கள். கவிஞரிடம் விடைபெறுகின்றேன். என்னுடைய தேகநிலை பற்றி விசாரித்து, பணம்பெறுமலே மருந்தைப் பார்சலில் அனுப்புவதாகக் கூறி ஒழுங்காகச் சாப்பிட முடியுமா என்றும் அவர் வினவுகிறார். என் கண்ணில் நீர் ததும்புகிறது. மோட்டார்ப்படகில் ஏறி ஊர் திரும்புகிறேன். எல்லாம் வல்ல இறைவியின் கோவில்கோபுரம் தூரத்தில் மறைகிறது. இரவு நடந்த அருமையான பேச்சுகள், அழகான நடனங்கள், இதுவரை கேட்டறியாத பெண் மணியின் இன்னிசைக்கச்சேரி எல்லாம் மனத்திரையில் கரைகின்றன. கவிஞரின் உற்சாகம், இந்த நிலையிலும் தளராத ஊக்கம்-அவர் அன்பு - அவர்பாடிய கதிர்காமப்பாடல் அந்தப் பாடலின் ஒரு துணுக்கு - என்மனத் திரையில் மிதக்கிறது.

"அலைமே லலையாய்
மணிவாய் மிடறு
அகரம் உகரம் இசை போட
கலையே உருவாய்
வருவார் திரளும்
கணநா யகனைக் கண்டாயா?
மலைமேல் ஒருமான்
உடையான் மகனாய்
மயில்வா கனனாய் வருவானைத்
தலையே பணிய
முருகா! சரணம்!"
சரணம்!! சரணம்!!
என்றாயா?



ஊர்காவற்றுறைத் தொகுதி மக்களைப் போன்ற அதிர்ஷ்டசாலிகள் தமிழ்ப் பகுதிகளில் வேறு எங்குமே கிடையாது! இத்தொகுதிக்குக் கிடைத்த எம். பீக்கள் அத்தனைபேருமே தங்கக்கட்டிகள்! அல்பிரட் தம்பி ஐயா, வீ. ஏ. கந்தையா, வீ. நவரத்தினம், பண்டிதர் இரத்தினம் — இவர்கள் அனைவருமே தேசப்பணியையும் தொகுதிப்பணியையும் சேர்த்துக் கவனிக்கும் திறன் படைத்த கெட்டிக்காரர்கள்! இவர்களது அயராத உழைப்பினால் இந்தத் தொகுதி அபாரமான முறையில் முன்னேறிக்கொண்டு வருகிறது.

சிவாஜி கணேசன் ''பாபு'' படத்தைப் பார்த்தார். அதில் வரும் அவரே நடித்த சில சோகக் காட்சிகளைப் பார்த்து விட்டு கண்கலங்கினார். நீங்கள் நடித்த படத்தைப் பார்த்து விட்டு நீங்களே கண்ணீர் விடுகிறீர்களே என்று இவரைக் கேட்டார்கள். அதற்குச் சிவாஜி ''நான் நடிக்கும் போதுதான் நடிகன்; படம் பார்க்கும் போது ரசிகன்'' என்று சொன்னார்!


விரைவில் வெளிவருகிறது!

6-ம் வகுப்பு 2-ம் தவணைக்குரிய

## புதிய சமூகக்கலை

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான தரைத்தோற்றம், மண்வகைகள், நில, நீர், கனிப்பொருள், பனை; காட்டு, மிருக, பட்சி, மீன், சங்கு, சிப்பி, முத்து வளங்கள், மனிதத்திறன் வளங்கள். உற்பத்திப் பொருட்கள்: 1971 ஆம் ஆண்டு உற்பத்திப் பொருட்களின் பெறுமானம். நெற்செய்கை தோட்டப் பயிர்ச்செய்கை, மீன்பிடிந்தொழில், சிறிய பெரிய கைத்தொழில்கள். உணவு, உடை, வசிப்பிடம், சுகாதாரம், கல்வி தபால் போக்குவரவு, பாதுகாப்புத் தேவைகள்.

பிரதேசத்தின் ஆட்சிமுறை கிரக மண்டலம் முதலிய விடயங்கள் வகுப்புக்கேற்ற வகையில் தெளிவாகவும் இலகுவான மொழி நடையிலும் பாடநேரத்துள் கற்கக்கூடிய அளவிலும் ஆக்கப்பெற்று அச்சிடப்படுகின்றது.

வெளியீடு:-

சுந்தரம் புத்தகசாலை,

அச்சுவேலி.

# கேள்வி பதில்

ஆர், பாஸ்கரன், கிளிநொச்சி.

★ இலங்கை குடியரசாவத னல் என்ன நன்மை?

'லேபல்' மாறுகிறது; அவ்வளவுதான்! உழைப்பும் தியாகமுந்தான் உண்மையில் ஒரு நாட்டை முன்னேற்ற முடியும்! குறுகிய மனப்பான்மைகொண்ட தலைவர்களால் ஒரு போதுமே இந்த நாட்டை முன்னேற்ற முடியாது!

எம். ஏ. ரமீம், மாத்தளை.

★ இப்போதுள்ள தினசரிகள் அரசாங்கத்தைக் கண்டு பயப்படுகின்றனவா அல்லது தினசரிகளைக் கண்டு அரசாங்கம் பயப்படுகிறதா ?

எழுத்தாளனின் பேனா மனச்சாட்சியுடன் செயல்படும் போதுதான் நீர் எழுப்பும் பிரச்சினை உருவாகும்! இந்த நாட்டிலுள்ள தினசரிகளில் பணியாற்றுவோரில் பெரும் பாலானோர் எழுத்தை ஆள்வதில்லை! எழுத்தை 'விற்ப'திலேயே ஆர்வமுடையவர்கள்!

பி. சிவகுமார்,

யாழ் இந்துக் கல்லூரி.

★ தமிழரசுக் கொடி எதனைக் குறிக்கின்றது?

,நீல' நிறத்திற்கும் அது பிரதிபலிக்கும் கொள்கைகளுக்கும் தமிரசுக்கட்சி இடங்கொகடுக்மாட்டாது என்பதை!

நெல்லித் தமிழரசன்,

நெல்லியடி.


★ பிறநாட்டு சஞ்சிகைக் கட்டுப்பாட்டால் ஈழத்து இலக்கிய உலகில் புது விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுவது உண்மையா ?

உண்மைதான்! உணர்ச்சி மட்டும் போதாது! உணர்ச்சி செம்மையான செயலாக உருவெடுக்காவிட்டால் எதிர்காலம் இருள் நிறைந்ததாக ஆகிவிடும் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது!

கே. சுசிலாதேவி

கொழும்பு-5

★ டட்லியா ஜே. ஆரா கெட்டிக்காரர்?




ஜே. ஆர்தான் கெட்டிக்காரர்! டட்லிக்கு பதவி ஆசை உண்டு; துணிச்சல் கிடையாது! ஜே. ஆர் அப்படியல்ல – தனது கொள்கைகளில் வெற்றி பெறுவதற்காக எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கத் தயங்காதவர்! இந்த அரசாங்கத்தின் போக்கை மாற்றப்போகின்ற மனிதராக ஜே. ஆர்தான் இருக்கப்போகின்ருர்!

எல். ஏ. நாயகம், வெள்ளவத்தை.

✱ பேராசிரியர் அண்ணாவுக்கும் எதிர்க்கட்சி அங்கத்தவர் ஒருவருக்கும் ஒரு முறை நடைபெற்ற வாக்குவாதத்தின் போது, அந்த அங்கத்தவரைப் பார்த்து "நீ பிற்போக்கும் அல்ல, முற்போக்கும் அல்ல, ஒரு அசிங்கம் — You are neither backward nor forward but awkward" என்று அண்ணா சொன்னார். இலங்கையில் இன்றைய அரசியலில் தம்மைத்தாமே முற்போக்குவாதிகள் எனக்கூறும் சில போலி சோஷலிஸ்டுகளுக்கும் இவ்வாக்கியங்கள் சாலவும் பொருந்தும் அல்லவா?

ஆம்! ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்பது போல அண்ணாபோன்ற ஒருவர் இல்லாத காரணத்தால் இந்த அசிங்கங்களில் சில இங்கே சிங்கங்களாக அல்லவா உலவி வருகின்றன!



பொ. சிவம், கொழும்பு-2.

✱ வடக்கு கிழக்கு மாகாணங்களில் சென்ற தேர்தல் வரைக்கும் தம்மைச் சுயேச்சைகளாகவும் சர்வோதய வாதிகளாகவும் காட்டித் திரிந்த ஒரு சிலர் தேர்தலுக்குப் பின்னர் சோஷலிஸ்டுகளாக மாறியதன் மர்மம் என்ன?

உண்மையிலேயே மாறிவிட்டார்களானால் அது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு விஷயமாகும்! ஆனால் சுயநலத்தை மட்டுமே கருத்தில் கொண்டு வெறும் 'லேபலை' மட்டும் ஒட்டிக் கொண்டு திரிவார்களேயானால் அவர்கள் விஷயத்தில் நாம் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்! சுயநலத்துக்காக "லேபலை" மாற்றுகிறவர்கள் தான் இந்த நாட்டு அரயசிலை அசிங்கப் படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்!

ஐ. கோமளேஸ்வரி, நெல்லியடி.

✱ தமிழரசாரின் தனி நாடு கோரிக்கை பற்றி தங்களின் கருத்து என்ன?

அவர்கள் தனிநாடு கோரவில்லையே! மாநில சுயாட்சி மட்டுந்தானே கோருகிறார்கள்! ஒரு நாட்டில் ஜனநாயகம் சிறந்த முறையில் செயல்படவேண்டுமானால் ஓரிடத்தில் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டியது மிகவும் அவசியமாகும்! தமிழரசுக் கட்சியின் கொள்கைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளாதவர்கள் தமிழ் மக்கள் மத்தியிலும் இருக்கிறார்கள் என்பதைத்தான் உமது கேள்வி காட்டுகிறது!

நா. தர்மலிங்கம்,
(பரிசுபெறும் கேள்வி)
புங்குடுதீவு—11;

✱✱ இலக்கியத் துறையில் முற்போக்கு எழுத்தாளரின் மார்க்ஸிஸ பார்வையும், ஜெயகாந்தனின் ஆன்மிக சமுதாயப் பார்வையும், எஸ். பொன்னுத்துரையின் நற்போக்குவாதப் பார்வையும், மு. தளையசிங்கத்தின் சர்வோதயப் பார்வையும் எந்த அளவிற்கு இன்றைய உலகில் காலத்திற்கு ஏற்ற பார்வையாக விரிகிறது?

இத்தனை பார்வைகளும் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணைந்து செல்லவேண்டிய பார்வைகளே தவிர ஒன்றுடன் ஒன்று முரண்படுகின்ற பார்வைகள் அல்ல! இவற்றுடன் சேர வேண்டிய பார்வைகள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன! ஒவ்வொரு காலகட்டத்திலும் எழுந்த தேவைகள்தான் வெவ்வேறு பார்வைகளின் தோற்றத்துக் காரணமாக இருக்கின்றன! ஒரு சில பார்வைகளைக்கொண்டு தேவைகள் அத்தனையையும் திருப்தி செய்துவிட முடியாது!

ஜெயா செல்வராஜா,
நாவலி தெற்கு.

✱ எங்கள் ஊரில் ஒரு வாலிபர் கள்ளுத் தவறணையில் வேலை எடுப்பதற்காக, தான் வேறு சமுகத்தைத்தைச் சேர்ந்தவர் என்று பொய் சொல்லியிருக்கிருர். இதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

தவறணையில் வேலை எடுத்துவிட்டாராஞல் தன்னை விடபலே செட்டிக்காரர்களைப் பற்றிய சரித்திரங்களை அவர் அங்கு தெரிந்துகொள்ளுவார்!

எஸ். ராமசாமி,
அக்கரைப்பத்தனை

✱ தமிழுக்காகவும் தமிழ்நாட்டுக்காகவும் எத்தனையோ பெரிய காரியங்களை யெல்லாம் சாதித்து வரும் கருணநிதி கள்ளுக் கடைகளைத் திறந்தது



'ஒரு குடம் பாலில் ஒரு துளி நஞ்சு கலந்தது' போன்றது அல்லவா?

இல்லை! சமுத்திரத்தில் விழுந்த ஒரு துளி நஞ்சுக்குச் சமமானது!

எம். எம் ஜலீல், யாழ்ப்பாணம்.

✱ பெற்ருேர் பட்டினியால் பதைபதைக்க, சாராயம் வாங்க கியூ வரிசையில் நிற்பவன் எப்படிப்பட்டவன்?

அட பரவாயில்லையே! பஸ்ஸுக்குக் காத்து நிற்கும் பெரிய மனிதர்களைக் காட்டிலும் சாராயம் வாங்க நிற்பவர்கள் ஒரு ஒழுங்கைக் கடைப்பிடிக்கிருர்களே! இங்கே முண்டியடித்துக் கொண்டு நிற்கிருர்கள்! அங்கே ஒழுங்கான 'கியூ' அல்லவா இருக்கிறது!

த. சிவஞானரஞ்சன்,
யாழ்ப்பாணம்.

✶ எமது இன்றைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில் ''அரசியல் விவேகி'' என்று யாரைக் குறிப்பிடலாம்?

அரசாங்கத்தை ஆதரித்து நிற்பவர்கள் ''அதிபுத்திசாலிகள்''; எதிர்த்து நிற்பவர்கள் ''அப்பாவிகள்'', இந்த நிலைமையில் 'விவேகி'களை எங்கே போய் தேடுவது ?

எம். ஏ. ரமீம், மாத்தளை.

✶ ஜே. ஆருக்கும் டட்லிக்கும் கருத்து வேறுபாடு உண்டு என்பதை சமீபத்திய சம்பவங்கள் நன்கு நிரூபிக்கின்றன அல்லவா ?

கொஞ்சம் பொறுங்கள்: எனக்கு ஒரு சந்தேகம். அரசாங்கத்தை திசை திருப்புவதற்



காக மிகவும் பிரமாதமான முறையில் திட்டமிடப்பட்டு, படு கெட்டிக்காரரான ஒருவரால் டைரக்ட் செய்யப்பட்டு, தகுந்த பக்கவாத்தியக் காரர்களின் துணையுடன் ஒரு நாடகம் நடைபெறுவதுபோல் எனது மனசில் ஒரு படம் தெரிகிறது!

ப. ஜெயந்தன்,
வேலணை கிழக்கு.

✶ ''இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஈழத் தமிழினத்திற்கு தீர்க்க தரிசனத்துடன் சீரான பாதையைக் காட்டிடும் தகுதி தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வ. நவரத்தினம் அவர்களுக்கே உண்டு'' என்கிறேன்; உங்கள் கருத்து என்ன ?

ஊர்காவற்றுறைத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் அபாரமான மூளைசாலி என்பது உண்மைதான் ! செல்வநாயகம், நவரத்தினம், அமிர்தலிங்கம், ராசதுரை ஆகிய நால்வரும் மிகுந்த உற்சாகத்துடனும் லட்சிய வேட்கையுடனும் உழைத்துக்கொண்டிருந்த காலத்தில்தான் தமிழரசுக் கட்சி ஜொலித்துக்கொண்டு இருந்தது ! அற்ப பேதங்களை மறந்து மறுபடியும் மிகவும் நெருக்கமாக ஒன்றுபட்டு உழைக்கும் ஆற்றலும் மனத்தூய்மையும் இந்த நால்வரிடமும் நிறைய உண்டு ! அந்த நாள் விரைவிலேயே வரலாம்.

ச. சிவலிங்கம், திருகோணமலை,

✶ கம்யூனிஸ்டுகளில் பெரும்பாலானோர் யார் பக்கம் இருக்கிறார்கள்? விக்கிரமசிங்கா பக்கமா, கெனமன் பக்கமா?

''பெரியமனிதர்கள்'' கெனமன் பக்கம் நிற்கிறார்கள்; தொண்டர்கள் விக்கிரமசிங்கா பக்கம் நிற்கிறார்கள்! அவர்களிலும் சிலர் இவர்களிலும் சிலர் அங்கும் நிற்கிறார்கள், இங்கும் நிற்கிறார்கள்!

றாபின்கான், மாத்தளை.

✱ மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஒரு படத்தில் நடிக்க ஏழு லட்சமும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஒரு படத்தில் நடிக்க மூன்று லட்சமும் எடுக்கிறார்கள். இதில் இருந்து என்ன தெரிகிறது?

சினிமாத் தயாரிப்பாளர்கள் சுத்தமான பிஸினஸ் பேர்வழிகள்! 'நடிகர்' திலகமாக இருப்பவரைக் காட்டிலும் 'மக்கள்' திலகமாக இருப்பவரைப் பயன்படுத்தி செய்யும் பிஸினஸ் தான் லாபகரமானதாக அமையும் என அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்!

சி. நடராசா, மட்டக்களப்பு.


✱ அரசியல் நிர்ணய சபையை பகிஷ்கரித்தது போல இலங்கை குடியரசானதன் பின்னர் ஏற்படப்போகும் தேசிய சபையையும் தமிழரசுக் கட்சியினர் பகிஷ்கரிப்பார்களா?

சோல்பரிக் கமிஷனைப் பகிஷ்கரித்த சமசமாஜக் கட்சியினர் அந்தக் கமிஷனின் சிபாரிசுப்படி அமைந்த பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கவில்லை! அதே வழியையே தமிழரசுக் கட்சியினரும் பின்பற்றினால் அது தவறல்ல.

செல்வி ரஜேஸ்வரி, களனி.

✱ உங்களுக்கு 'மினி கவுண்' அணிந்த பெண்களைப் பிடிக்குமா? எனக்கு அந்தக் கவுணைப் பார்க்கும் போது வெறுப்பாக இருக்கிறது! உங்களுக்கு?

'மினி'ப் பெண்களும் 'மின்மினி'ப் பெண்களும்தான் 'மினி கவுண்' அணிகிறார்கள்! எனக்கு 'மினி'ப் பெண்களையும் பிடிக்காது; 'மின்மினி'ப் பெண்களையும் பிடிக்காது!



ம. உதயணன், திருமலை.

✱ அதிக வயதாகிய எம். ஜி. ஆர். படங்களில் சுறுசுறுப்பாக நடிக்கிறார், சிவாஜி அதைப் போன்று நடிப்பதில்லை? என்ன காரணம்?

சிவாஜி ஒவ்வொரு படத்திலும் தான் ஏற்றுள்ள பாத்திரத்தின் குணசித்திரத்தை பிரதிபலிக்கக்கூடிய முறையில் நடிக்கிறார்! எம். ஜி. ஆர். எல்லாப் படங்களிலும் 'எம். ஜி. ஆ'ராகவே நடிக்கிறார்! இதுதான் காரணம்! சிவாஜி அப்படி நடிப்பதும், எம். ஜி. ஆர். இப்படி நடிப்பதும்தான் ரசிகர்களுக்கும் பிடிக்கிறது!

எஸ். ராமச்சந்தின்,
நுகேகொடை.

✱ 'தமிழரசு மூளை' ஏன் தமிழரசுக் கட்சியிலிருந்து விலகியது? அது மீண்டும் தமிழரசுக் கட்சியுடன் இணையுமா?

இணையும்! அந்த நாள் விரைவிலேயே வரும்! அந்தரங்க சுத்தியுடன் தமிழர் பிரச்சினைகளில் ஆர்வம் காட்டுகின்ற அத்தனை தலைவர்களுமே இணைந்து செயல்படவேண்டிய காலம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது!

நா. நகுலேந்திரன், தெகிவளை.

★ ஜெயகாந்தனின் இலக்கிய ஆக்கங்கள் பற்றி சில வரிகள் கூறமுடியுமா?

எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் தர்க்க ரீதியாகவும் தத்துவ ரீதியாகவும் சிந்திக்கத் தெரிந்த மனிதர் ஜெயகாந்தன். தமிழ் எழுத்தாளர்களில் தொடர்ந்து வளர்ந்து கொண்டு வருபவர் ஜெயகாந்தன் ஒருவரே! இவருடைய எல்லா எழுத்துக்களையும் எல்லா ரசிகர்களாலும் எல்லா நேரங்களிலும் ரசிக்க முடியாது, இவரது எழுத்தை ரசிப்பதற்கும் ஒரு மனப்பக்குவம் வேண்டும்! படிப்பினாலும், தெளிந்த சிந்தனையினாலும், இதய நெகிழ்வினாலும் வரவேண்டிய மனப்பக்குவம் அது!

வேலின் செல்வன், யாழ் நகர்.

★ தமிழரசுக் கட்சியின் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்ற தீவிரவாதியான புதுமைலோலன் இன்று தீவிரம் அடங்கியிருப்பதன் மர்மம் என்ன?



அவரது தீவிரம் அடங்கவில்லை — திசை திரும்பியிருக்கிறது!

நெல்லியூர் கலைப்பித்தன், கரவெட்டி.

★ சஞ்சிகையாளர் ஒன்றியத்தில் சஞ்சிகைகள் நடாத்தாத எழுத்தாளர்கள் இடம் பெறுவது சரி என்கிறீர்களா?

சஞ்சிகைகளின் முதுகெலும்பாக இருப்பவன் எழுத்தாளன்! எனவே எழுத்தாளர்களுக்கு இடம் அளித்திருப்பது சரியான காரியம்தான்! எழுத்தை ஆள்பவர்களுக்கு இடமளிப்பது தவறல்ல. ஆள்பவர்களின் எழுத்தர்களுக்கு இடமளிப்பது தான் தவறு!

பொ. கிருபானந்தன் வல்வெட்டித்துறை.

★ இந்தியாவின் சிறந்த நடிகராக எம். ஜி. ஆர் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

சென்ற தேர்தலுக்கு முன்னர் வரைக்கும் தி. மு. க. எம் பிக்களின் ஆதரவை நம்பியே தான் ஆட்சி செய்ய வேண்டி இருந்ததை இந்திரா அம்மையார் இன்னமும் மறக்காமல் இருக்கிறார் என்பதையும், கருணாநிதியின் மாநில சுயாட்சிக் கோரிக்கையினால் மத்திய மாநில உறவுகளில் எவ்வித விரிசலும் ஏற்பட்டு விடவில்லை என்பதையும், கருணாநிதியும் சரி இந்திராகாந்தியும் சரி ஒருவரோடு ஒருவர் நேரடியாக மோதிக்கொள்ள விரும்பாமல் நட்புறவின் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள விரும்புகிறார்கள் என்பதையும்தான் இது காட்டுகிறது! அரசாங்கம் வழங்கும் விருதுகளில் 'அரசியல்' காரணம்தான் முதலிடம் வகிக்கும்!

■ கோப்பியைவிட தேநீர் நல்லது என்று விஞ்ஞானிகள் சிலர் இப்போது அபிப்பிராயம் தெரிவித்து இருக்கிறார்கள். கோப்பி குடிப்பதால் இரத்தக் குழாய்கள் கனமாகின்றனவாம் தேநீர் குடிப்பதால் இரத்தக் குழாய்கள் கனமாவதில்லையாம். இரத்தக் குழாய்கள் கனமாவது இருதய வியாதிகளுக்கு வழி கோலும்.

■ கம்ப்பியூட்டர் மூலமாக வாழ்க்கைத் துணையைத் தேர்ந்து எடுக்கும் பழக்கம் மேல் நாடுகளில் அதிகரித்து வருகின்றது; எங்களைப் பற்றிய சரியான தகவல்களையும் கொடுத்து எங்களது தேவைகளையும் தெரிவித்தால் கம்ப்பியூட்டர் உடனே பொருத்தமான ஜோடியைத் தெரிந்து எடுத்துத் தரும், மனித மூளையின் கணிப்பினால் ஏற்படும் தவறுகளைக் காட்டிலும் குறைந்த தவறுகளே கம்ப்பியூட்டரின் கணிப்பில் ஏற்படுகின்றன!

■ 'பார்வதி நாதசிவம்-என்ற இளைஞர். சில்லையூர் செல்வராசன் சொன்னது போல, 'பார்த்தால் பசுமாதிரி' இருப்பார். அந்தத் தோற்றத்துக்குள்ளே ஒரு புலி—கவிதைப்புலி இருப்பதைப் பல காலமாக வாசகர்கள் அறிவார்கள்; இவருடைய கவிதைத் தொகுதி ஒன்று 'காதலும் கருணையும்' என்ற பெயரில் கடந்த மாதம் வெளியாகியிருக்கிறது. ம. க. வேற்பிள்ளையின் பேரன், பண்டிதர் மகாலிங்கசிவத்தின் மகன், பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற 'புலவர்' —என்ற அணை துணை எதுவுமில்லாமலே இவருடைய கவிதைகள் தலைதூக்கி நிற்கின்றன! (காதலும் கருணையும்: வெளியீடு: பி. வேலாயுதபிள்ளை கூடலகம், மயிலங் கூடல், இளவாலை. விலை ரூ. 2-00)

■ ஜாக்குலின் கணவர் ஓனாசிஸ் பெரும் பணக்காரர். இவர் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருக்கிறார். இந்தப் புத்தகத்தின் பெயர் ஓனாசிசின் சிந்தனைகள், பாங்க்செக் புத்தக வடிவத்தில் இந்தப் புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்கள்!

■ இப்போதைய அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவர்! இந்தக் கட்சிக்காக ஒரு பெரிய கம்பெனியிடமிருந்து நாற்பது இலட்சம் ரூபாய் நிதி வாங்கி



னாராம் நிக்ஸன்! நாற்பது இலட்சரூபாயை யாராவது ஒருபோதும் சும்மா கொடுக்கமாட்டார்கள். இதனால் இன்று நிக்ஸனின் பெயர் ஒரு ஊழல் வழக்கில் அடிபட்டுக்கொண்டு இருக்கிறது!

# மயக்கம்!

"நளினி கோபித்துக் கொண்டிருப்பாளா ?......

"இருக்காது! ....ம்,...இருக்கும், இருக்கும், நேற்று நான் நடந்து கொண்ட முறை ..சே!

என்ன 'சே'? உனக்குப் பிடிக்காததா அது? அந்த......"

மேலே 'இன்வேட்டகமாஸ்' இல் (மேற்கோட் குறி) இருப்பவை, இப்போது நான் நினைத்துக் கொண்டிருப்பவை.

ஓங்கி உதைத்தேன் தகர டப்பாவை. அது 'டண்ரடண் டரண்' என்று ஒலியெழுப்பியவாறு உருண்டது, நின்றது.

நடந்தேன்.

மீண்டும் தகரடின்னை உதைக்கக் காலை ஓங்கியபோது,

"கிறீச்!".

கார் ஒன்று பக்கத்தில் பிறேக் போட்டது.

404 பேஜோ. சிவப்பு.

'சிவப்புக்கலர் சரியில்லை, பச்சை நிறம் அடித்தால் நன்றாக இருக்கும்'.

காரினுள் இருந்து எழுந்த குரல் மேலும் யோசிக்கவிடவில்லை. அது "மிஸ்டர்! இவனை உமக்குத் தெரியுமா?" என்று வினவியது.

காருக்குள் மூன்று பேர். 'டிரைவர் சீட்'டில் ஒருவர். இரண்டாம் முறை எங்கேயாவது பார்த்தால் உடனே நினைவுக்கு வராத முகம். பின்பக்கத்தில் 'சைட் பேர்ண்ஸ்' வைத்துக் 'கூலிங்கிளாஸ்' அணிந்த இன்னொருவர். அவர் பக்கத்தில் ஒரு பெண்.

பெண்! அழகாயிருந்தாள்.

அதோடு மயக்கமாயுமிருந்தாள். (இது 'சஸ்பென்ஸ்'கதையானபடியால் அவள் மயக்கமாகத்தானிருக்க வேண்டும். நித்திரையாக இருக்க முடியாது)

"மிஸ்டர்......இவனைத்தெரியுமா?" சைட்பேர்ண்ஸ் கேட்டார். கார் கதவையும் திறந்தார். நான் தலையை உள்ளே நீட்டிப் பார்த்தேன்.

"மடார்!".

கண்ணுக்குள்ளே நட்சத்திரங்கள் பல தெரிந்தன. அவற்றை எண்ணுவதற்குள்ளே மயக்கம் வந்தது.

பின் சீட்டில் அப்படியே சாய்ந்தேன்.

"முட்டாள்" என்றார் 'அந்த மனிதர்'. என்னைச் சொல்லவில்லை என்று தெரிந்தது. 'அந்த மனிதர்' சைட்பேர்ண்ஸைப் பார்த்து "அடையாளம் தெரியவில்லையா உனக்கு? புலியைக் கொண்டுவரச் சொன்னால் பூனையைக்கொண்டு வந்திருக்கிறாயே மடையா!" என்றார், சினிமாப் பாணியில்.

'பூனையைப் பற்றி அவருக்குத் தெரியாது. பூனை நகங்களை மறைத்து வைத்திருக்கும். ஆனால் இப்போது பூனைக்குத் தலையை 'விண்' என்று வலித்தது

மௌத்கல்யன்



“...மிஸ்டர், இவளை உனக்குத் தெரிகிறதா?”

பெரிய உருண்டையாகத் தலை வீங்கியிருந்தது.’

‘இதை நளினி பார்த்தால் பார்க்கக் கூடாது.’

சைட் பேர்ன்ஸ் முழிசினார். கூலிங்கிளாஸைக் கழற்றிக் கையில் வைத்திருந்தார், கண்ணில் போடச்சொல்ல நினைத்தேன். ‘அந்த மனிதரை’ப் பார்த்ததும் வாயை மூடிக் கொண்டேன்.

‘அந்த மனிதர்’—

ஆறடிக்குக் குறையாத வளர்த்தி என்னைப்போல் தலை மயிர் வளர்த்திருந்தார். நாலு நரை மயிர்கள் எட்டிப்பார்த்தன. மீசை இல்லை. மீசை இருந்தால் கிட்டத்தட்ட ‘பாலாஜி’யைப் போல இருப்பார்.

அவர் என்பக்கம் திரும்பினார். பக்கத்து வீட்டுக் கோழியைப் பார்ப்பது போல் என்னைப் பார்த்தார், “நீ யார்?” என்றார். பேசாமலிருந்தேன். கையை உயர்த்தியவாறு கிட்டே வந்தார். தங்க மோதிரங்கள் பல கை விரல்களில் இருந்தன; விரல்கள் மடங்கி இருந்தன. அவை என் முகத்துக்குக் கிட்ட வந்தன.

நான் தமிழ்ப்படக் கதாநாயகனுக இல்லாதபடியால் அடி வாங்க விருப்பப்படவில்லை சொன்னேன் என்னைப்பற்றி.

''பி. ஏ; ஸெகண்ட் டைம் வேலை இல்லை: அது தேடப்படுகிறது; அப்பா பென்சன்; அம்மா அரைக்குருடு: வேலை இல்லை. (2ம் முறை).ஒரே பிள்ளை ஆண்பிள்ளை. வீடு ஈட்டிலிருக்கிறது. கடன். வேலை இல்லை; (3ம் முறை). இத்யாதி .. இத்பாதி''

அந்த மனிதர் இதைக் கேட்டார். பிறகு 4 நிமிஷம் யோசித்தார்.

''பெயரென்ன?'' சைட் பேர்ண்ஸ் கேட்டார்.



சினிமா நடிகை ஜெயலலிதாவிடம் ஒரு விலை உயர்ந்த ''ஃபோர்ட்'' கார் இருக்கிறது. இந்தக் காரைத்தான் ஸ்ருடியோவுக்கும் வெளியூர்களுக்கும் எடுத்துக்கொண்டு போகிருர். இதில் ஏர் கண்டிஷன் வசதி இருக்கிறது. ரேடியோ வசதி இருக்கிறது. இந்த மாதிரியான கார் சென்னையிலேயே இவரிடம் மட்டுந்தான் இருக்கிறது.

சொன்னேன்.

அந்த மனிதர்– டுப்ளிகேட் பாலாஜி - என்தோளில் கை போட்டு அணைத்தவாறு என்னைப் பக்கத்து அறைக்கு அழைதுச் சென்ருர்;

''ஒரு வேலை ஒன்று—வெரி சிம்பிள்—செய்வாயா? மோகனுக்குப் பதிலாக — அவனைக் காணவில்லை—நீ ஒரு இடத்துக்குப் போக வேண்டும்'' என்ருர்.

மேலும் கொஞ்சம் சொன்ஞர். கொஞ்சம் தந்தார்.

✣ ✣ ✣

புறப்பட்டேன்.

வலது கையிலே சூட்கேஸ். உள்ளே கஞ்சா நிறைய: இடது கையிலே வெளிநாட்டு சிகரெட் ஓசி;

நின்று யோசித்தேன், இனி நடக்கப் போவதுபற்றி.

(இதனுள்ளே நான் யோசித்தவற்றைப் பற்றி இப்போது வெளியிட்டால் 'சஸ்பென்ஸ்' குன்றி விடும். ஆகையால் என் அருமை வாசக, கரே - கியே-மேலே படிக்கவும்.)

யாரோ பின்ஞல் வருவது போலிருந்தது. திரும்பினேன். கட்டையன் ஒருவன். 'டுப்ளிகேட்' பாலாஜி வீட்டில் பார்த்த நினைவு. இவன் என்னைப் பின்தொடர்கிருன். எனது வேலையைச் சரிபார்க்க அனுப்பப்பட்டிருக்கிருன். இருக்கட்டும்.

உடனே திரும்பி வந்த வழியே நடந்தேன். வழி மறித்தான்.

''எங்கே ?'' என்ருன்;

''சிகரெட் வேணுமா ? '' என்று கேட்டேன்.

"எங்கே ?" என்றான் திரும்பவும்.

"உன்னுடைய எசமானின் வீட்டிற்கு" என்றேன்.

"ஏன் ?"

"யூ. ஸீ. மிஸ்டர். அவர் சொன்ன விலாசத்தை மறந்து விட்டேன். 'கருணானந்தன்' வீதியா ? இல்லை, 'கயிலை நாதன்' வீதியா ? 'கொன்பியூஸ்' அடிச்சிட்டுது" சொல்லி விட்டுச் சிரித்தேன்.

அவன் சிரிக்கவில்லை.

"கருணானந்தன் வீதி" என்றான்.

"ஆனால் மிஸ்டர். எனக்குக் 'கயிலை நாதன்' வீதியென்று சொன்னது ஞாபகம். அதுதான் கேட்கப் போகிறேன்."

"நீ திரும்பப் போவதை 'பொஸ்' விரும்பமாட்டார்"— கட்டையன்.

"அப்படியானால் 'டெலிபோனி'ல் கேட்கிறேன். நம்பர் என்ன ?" என்று கேட்டேன்.

கட்டையன் தயங்கினான்.

"சொல் சீக்கிரம். நேரம் போகிறது" — அவசரப்படுத்தினேன். சொன்னான்.

பக்கத்திலிருந்த தொலைபேசியை நாடினேன்.

தொடர்பு கொண்டேன்.

✣ ✣ ✣

"எல்லாம் கரெக்ட்தானே? நான் போகலாமா"? இது நான்.

"O. K. தம்பி. அடுத்த பார்சல் எப்போது?" என்றார் சூட்கேசைப் பெற்றுக் கொண்டவர்.

"தெரியாது" என்றேன் மொட்டையர்க்கு.

வாசலில் நிழலாடியது. கட்டையன் காத்துக்கொண்டிருக்கிறான். 'காத்துக் கொண்டிரடா மடையா!'

"கொஞ்சம் தண்ணீர் தருகிறீர்களா?"

பக்கத்தில் உள்ள 'பிரிஜ்ஜைத்' திறந்து, ஏற்கனவே உடைக்கப்பட்டுக் குடிக்கப்பட்ட அரைவாசி மீந்திருந்த 'நெக்டே'வைப் போத்திலோடு தந்தார்.

பழைய ஞாபகத்தில் போத்திலை 140° பாகை சாய்த்து, அண்ணாந்து குடித்தேன். மெதுவாக,

"தாங்ஸ். போய்வரட்டுமா?" என்றேன்.

"போகவேண்டாம்"-பின்னாலிருந்து குரல்வந்தது. பொலிஸ்!

நிறையப்பேர். இரண்டு இன்ஸ்பெக்டர்கள்.

கட்டையனை ஒரு மொட்டைப் பொலிஸ்காரர் அணைத்துக் கொண்டிருந்தார் அன்புடன். அவன் பயனில்லாமல் திணறிக் கொண்டிருந்தான்.

இன்ஸ்பெக்டர் சூட்கேஸைப் பார்த்தார்.

"அதற்குள் என்ன?" என்றார்.

சூட்கேஸைப் பெற்றுக் கொண்டவர், 'இன்ஜெக்ஷன்' பெற்றுக் கொண்டவரைப் போலத் துடித்தார். "எனக்கொன்றும் தெரியாது சேர். இவன் தான் கஞ்சா வேண்டுமா என்று விற்க வந்தான். இவனை

'அரெஸ்ட்' பண்ணுங்கோ' என்ருர்: அவருக்கு வேர்த்தது.

"அப்படியா!" என்ருர் இன்ஸ்பெக்டர்.

பிறகு என்பக்கம் திரும்பி என்னைச் சுட்டிக் காட்டி "இவரைத் தெரியுமா உனக்கு? இவர் சி. ஐ. டி. டிப்பார்ட்மென்டில் மாதச் சம்பளம் பெற்று வருகிருர்—அதாவது அங்கே வேலை பார்க்கிருர்" என்று சொல்லும் போது,

சூட்கேஸ்காரர் என் மீது பாய்ந்தார்; விலகினேன்; 'மொடேர்ன் ஆர்ட்' போலக் கீழே விழுந்தார் அலங்கோலமாக;

"உங்களுடைய டெலிபோன் செய்தி நல்ல நேரத்தில் கிடைத்தது சேர்" என்ருர் இன்ஸ்பெக்டர் என்னைப் பார்



■ முன்னர் பூட்டோ எங்கே பேசினுலும் அங்கே நிறையக் கூட்டம் வந்தது. இப்போது பூட்டோ பேசினுல் கூட்டம் வருவதில்லை; பூட்டோவின் பேச்சில் பாகிஸ்தான் மக்களுக்கு இருந்த நம்பிக்கை இப்போது வெகுவாகக் குறைந்து விட்டது;

த்து. 'carry on' என்றேன் நான், தலையைத் தடவியவாறு. வீக்கம் குறைந்து விட்டது. நளினியைப் பார்க்கப் போகலாம்.

புறப்பட்டேன்,

கட்டையனின் அருகில் வந்து கேட்டேன்,

"சிகரெட் வேணுமா?"

அவன் பல்லைக் கடித்தான்;

"உன்னுடைய 'பொஸ்' ற்கு நான் ஃபோன் பண்ணவில்லை; "என்னுடைய பொஸ்" ற்குத்தான் -பொலிஸ் -ஃபோன் செய்தேன்" என்று சொல்லி விட்டு,

"உன்னுடைய பொஸ்ஸை பொலிஸ் ஸ்டேசனில் போய்ப் பார்" என்றவாறு நடந்தேன்.

"ம்;...ஹூம்...தேடி வந்து அகப்பட்டான் மூளையில்லாத ......ம்......

நளினி... ஓ...என் நளினி... ஏதாவது வாங்கிக்கொண்டு போகலாமா?......அவள் கதைப்பாளா? இல்லை......பேசாமலிருப்பாளா?"

'கிறீச்!'

கார் ஒன்று பக்கத்தில் பிறேக் போட்டது.

"மிஸ்டர்! இவளை உமக்குத் தெரிகிறதா!"

பெண்குரல்! பெண்.


உள்ளே தலையை நீட்டாமல், பார்த்தேன்; நளினி சிரித்தபடியே என்னைப்பார்த்தாள்.

உள்ளே ஏறினேன்; மயக்கமானேன். பயப்படாதீர் ஐயா-அம்மா! இது வேறு விதமான மயக்கம்.

இந்தியாவின் மிகப்பெரிய நகரமாகவும், உலகின் மிகப் பெரிய நகரங்களில் ஐந்தாவதாகவும், விளங்குகிறது பம்பாய். 1661ம் ஆண்டில் போர்த்துக்கல் மன்னன் தனது சகோதரியை இங்கிலாந்து மன்னன் சார்லசுக்குத் திருமணம் செய்து கொடுத்தபோது பம்பாய் நகரை அவளுடைய சீதனங்களில் ஒன்றாகக் கையளித்தான். இங்கிலாந்து மன்னனுக்கு இந்த நகரத்தினால் பயன் ஏதும் இல்லாமல் போகவே, கிழக்கிந்தியக் கம்பனிக்கு குத்தகைக்குக் கொடுத்து விட்டான் அவன். குத்தகைப் பணம் எவ்வளவு தெரியுமா? ஆண்டொன்றுக்கு பத்தே பத்துப்பவுண்! பம்பாய் நகரில் இன்று 60 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். சராசரியாக் ஒவ்வொரு ஏழு நிமிடத்துக்கும் ஒரு புதிய ஆள் வீதம் பம்பாயில் குடியேறிக் கொண்டிருக்கிறார்கள். சனத்தொகை இந்த மாதிரிப் பெருகிவிட்டபடியால் இங்கே எல்லாவற்றுக்கும் பற்றாக் குறைதான். உணவுபற்றாக் குறை, இருப்பிட வசதி மிக மோசம். சுகாதார இலாகா திணறுகிறது! சுவாசிக்கும் நல்ல காற்றுக் கூட இங்கே பஞ்சமாயிருக்கிறது!

இசை அமைப்பாளர் விஸ்வநாதன் இப்போது பல படங்களில் சொந்தக் குரலில் பாட ஆரம்பித்து இருக்கிறார். இவர் சமீபத்தில் "வெள்ளி விழா" படத்தில் ஒரு பாட்டுப் பாடினார். இந்தப் படத்தின் இசையமைப்பாளர் குமார். ஒரு இசையமைப்பாளரின் படத்தில் இன்னொரு இசையமைப்பாளர் பாடுவது இதுவே முதல் தடவை!

'சம்சாரம்' என்ற மிகவும் புகழ்பெற்ற வாஸனின் தயாரிப்பான படத்தில் நடித்த நடிகை புஷ்பவல்லி! இவரது மகள்தான் இப்போது இந்திப் படவுலகில் மிகவும் பிரபலமாக இருக்கும் கவர்ச்சி நட்சத்திரம் பானுரேகா! இவரின் அப்பா யார் என்ற சங்கதி நீண்ட நாட்களாக மர்மமாக இருந்து வந்தது! ஆனால் திடீரென ஒருநாள்



புஷ்பவல்லி அறிவித்தார் பானுரேகாவின் அப்பா ஒரு பிரபலமான தமிழ் நடிகர் என்று! அந்த மர்மமும் இப்போது வெளியாகிவிட்டது! "பிலிமாலயா" என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், தான்தான் பானுரேகாவின் தந்தை என்ற உண்மையை நடிகர் ஜெமினி கணேசன் ஒப்புக்கொண்டு இருக்கிறார்!

■ 'உயர்தனிச் செம்மொழிகள்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் பெருமை பெற்றவை ஐந்து மொழிகள்! பிறமொழிகளின் துணையின்றி தனித்து இயங்கக்கூடிய வளம் பெற்றவை இந்த ஐந்து மொழிகளும்! தமிழ், சமஸ்கிருதம், கிரேக்கம், லத்தீன், ஹீபிரு என்பனவே இந்த ஐந்து மொழிகளும்! இவற்றுள் நான்கு செத்த மொழிகள் - வாழும் மொழி தமிழ் ஒன்றுமட்டுமே!

■ ஸ்ரீதரின் 'வெண்ணிறஆடை' திரைப்படத்தில் நடிப்பதற்காக ஒரு நடன நங்கை வந்தார், ஸ்ரீதர் அவரை 'டெஸ்ட்' செய்து பார்த்துவிட்டு 'வேண்டாம்' என்று ஒதுக்கிவிட்டார்.



அன்று அவரை ஒதுக்காமல் நீண்டகாலத்துக்கு ஒப்பந்தம் செய்யாமல் போனேனே என்று இப்போது கவலைப்படுகிறார் ஸ்ரீதர்! காரணம் என்ன? அவர் தான் ஹேமமாலினி - ரசிகர்களால் இன்று அழகு தேவதை, கனவுக்கன்னி என்று புகழப்படுகின்றவர்!

✣ தோட்டத் தொழிலாளர் பிள்ளைகள் பலர் கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம், களுத்துறை ஆகிய தூர இடங்களிலுள்ள பணக்காரர்களின் வீடுகளில் வேலைக்காரர்களாக இருக்கிறார்கள்! பெரும்பாலான வீடுகளில் இவர்கள் அடிமைகளாகவே நடத்தப்படுகிறார்கள்! இந்த நிலைமைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும். இப்படி வேலைக்காரர்களாக இருக்கும் பிள்ளைகள் அடிக்கடி காணாமல் போகும் நிலையும், வீட்டு எஜமானிகளின் கொடுமைகள் தாங்காமல் வீடுகளை விட்டு வெளியேறி தீயவழிகளில் ஈடுபடும் துர்ப்பாக்கிய நிலையும் உடனடியாக நீக்கப்படவேண்டும்! மலையகத் தலைவர்கள் மட்டுமல்லாது மனிதத் தன்மை கொண்ட அத்தனை பேருமே இந்த விஷயத்தில் அதிகஅக்கறைகாட்டவேண்டும்!

✣ வெகு விரைவிலேயே இலங்கையில் வாழும் மக்களில் பெரும்பாலானோருக்கு பாரிசவாத நோய் பீடிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது! இன்னும் எட்டுவருட காலத்தில் சுமார் 60,000 பேருக்கு இந்நோய் பீடிக்கும் ஆபத்து இருக்கிறது! உணவாகக் கொள்வதற்கு தகுதியற்ற மரக்கறி வகைகள் உட்கொள்ளப்படுவதே இதற்குக் காரணமாகும்! மக்கள் முக்கிய உப உணவாகப் பயன்படுத்தும் மரக்கறி வகைகளில் நஞ்சுத் தன்மை கலந்து இருப்பதால் அவற்றை உண்பவர்கள் பாரிசவாத நோயினால் பீடிக்கப்படுவதாக வைத்திய பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது! மரக்கறிச் செடிகளுக்கும் கொடிகளுக்கும் நச்சுத் தன்மை கலந்த கிருமிநாசினி தெளிப்பதாலேயே மரக்கறிகளில் நச்சுத்தன்மை சிறிது சிறிதாகச் சேருகின்றது.

▮ இங்கிலாந்தில் ஏகப்பட்ட இந்தியர்களும், பாகிஸ்தானியர்களும், மலேசியர்களும் வாழ்ந்து வருகிறார்கள். சில இடங்களில் வெள்ளைக்காரர்களையே காண முடியாதபடி வெளிநாட்டுக்காரர்களே நிறைந்து இருக்கிறார்கள். இங்கிலாந்திலுள்ள சில ஹோட்டல்களில் புரியாணி, இட்லி, குருமா, தோசை, வடை முதலியன எல்லாம் கிடைக்கின்றனவாம்!

▮ நடிகர் ரிச்சர்ட் பர்ட்டனிடம் ஒரு நல்ல பழக்கம் இருந்து வருகிறது. இவர் தனது மனைவி எலிஸபெத் டெய்லருக்கு ஒவ்வொரு தடவையும் ஏதாவது விலை மிகுந்த நகையை வாங்கிக் கொடுக்கும் போதெல்லாம் அதன் மதிப்புக்கு இணையான ஒரு தொகையை தருமம் செய்கிறார். இதனால் இவர் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்ய வேண்டி இருக்கிறது.








▮ கவிஞர் காசி ஆனந்தன் இவ்வளவு காலமும அரசாங்க ஊழியராகவே கடமையாற்றி வந்தார். இப்போது புதிய அரசியலமைப்புச் சட்டத்தை எதிர்த்து, தமது பதவியை உதறிவிட்டு வெளியேறியிருக்கிறார். நீண்டகாலமாகத் தமிழரசுக் சாட்சியாளராய் இருந்துவரும் ஆனந்தன். இனிமேல் கட்சியின் முழுநேர ஊழியராகக் கடமையாற்றுவார்! காசி ஆனந்தன் சிறந்த சிந்தனையாளர். நல்ல உழைப்பாளி. - தமிழரசுக் கட்சிக்கு இவர் முழுநேர ஊழியராக வந்திருக்கிறார். மிக விரைவிலேயே கட்சியில் மிக முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இவர் வந்துவிடுவார்!

# தமிழ் நாட்டில்

## கண்டதும் —

## கேட்டதும்.

இலங்கையை விட்டு வெளியே கிளம்பும் போதெல்லாம் வெறுமனே ஒய்வை மட்டுமே கருத்தில் கொண்டு தான் நான் புறப்படுவது வழக்கம்.

இந்தத் தடவையும் அந்த மாதிரித்தான் ஒரு பயணம் செய்துவிட்டுத் திரும்பி வந்தேன்.

சென்ற ஏப்ரல் மாத பிற்பகுதியும் மே மாத நடுப்பகுதியும் சேர்ந்த ஒரு பதினைந்து நாட்களுக்கு தமிழ் நாட்டிலும் பெங்களூரிலும் பிரயாணம் செய்தேன்;

புதிய மனிதர்களைக் காணும் போதும் புதிய ஊர்களில் பிரயாணம் செய்யும்போதும் என்னையறியாமலே எனது மனதில் ஒரு உற்சாகமும் மகிழ்ச்சியும், தோன்றுவதை நான் அவதானித்திருக்கிறேன்;

இந்த மனமகிழ்ச்சியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுதான் நான் எனது பயணங்களை அமைத்துக்கொள்வது வழக்கம்;

இந்தப் பயணத்தின்போது நான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் இங்கே நினைவுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

இப்படி நினைவு கொள்வதே ஒரு இன்பமான அனுபவமாக இருக்கிறது;

2

இந்தத் தடவை நான் இந்தியாவில் பயணஞ் செய்தபோது முன்னர் எப்போதும் கண்டிராத வகையில் ஒரு அசாதாரணமான தன்னம்பிக்கை ஒவ்வொரு இந்தியனின் குரலிலும் தொனிப்பதை என்னால் கண்டு கொள்ள முடிந்தது.

இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன்.

திருச்சியில் ஒரு ஹோட்டலில் நான் தங்கியிருந்தபோது, மதுரையில் இரும்புப் பெட்டி வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு முஸ்லிம் இளைஞரைச் சந்தித்தேன். இப்ராஹிம் என்பது அவர் பெயர்;

அவரும் அந்த ஹோட்டலில் தங்கியிருந்தார்;

புதியவர்களுடன் மிக எளிதில் நட்புக்கொண்டு மனம் விட்

டுப் பேசும் தன்மை படைத்தவராக அவர் இருந்தார்.

பல விஷயங்களைப் பற்றி அவர் என்னுடன் பேசினார்.

இந்திய மக்களிடம் காணப்படும் புதிய உற்சாகம் பற்றியும் இருவரும் பேசினோம்.

கடந்த சில ஆண்டுகளில் மிகவும் குறுகிய காலத்தில், ராணுவத்துறையிலும் அரசியல் துறையிலும் பொருளாதாரத் துறையிலும் விளையாட்டுத் துறையிலும் இந்தியா பல சர்வதேச வெற்றிகளைப் பெற்று இருக்கிறது.

இப்படிப் பல்வேறு துறைகளிலும் இந்தியா பெற்று வருகின்ற வெற்றிகள் ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் தெரிந்த சங்கதிகளாக இருக்கின்றன.

"நாங்கள் எல்லாத் துறைகளிலும் வெற்றி பெற்று வருகிறோம் என்ற இந்த உணர்ச்சியே இங்கு வாழும் மக்களை புதிய உற்சாகத்துடன் செயல்பட வைக்கிறது" என்றார் அந்த இளைஞர்.

வெற்றியே வெற்றிக்குப் படிக்கல்லாக அமைகிறது.

அந்த இளைஞர் கூறிய விஷயங்களில் நிறைந்த உண்மை இருப்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அந்த இளைஞர் எப்போதும் சிரித்தபடியே இருந்தார்; கலகலவென்று பேசினார்; கண்டிப்பாக மதுரையில் உள்ள தங்கள் வீட்டுக்கு என்னை வரும்படி அழைத்தார்.

"இந்தியா பாகிஸ்தான் யுத்தத்தின்போது உங்கள் நிலைமை எப்படி இருந்தது. நீங்கள் முஸ்லீம்கள் என்பதனால் யாராவது ஏதாவது..." என்று நான் அவரை நோக்கிக் கேட்டேன்.

"சே! அப்படி எதுவுமே இல்லை. தமிழ் நாட்டில் உள்ள முஸ்லீம்கள் எல்லாருமே தமிழர்கள்தான்! நாங்கள் மதத்தால் வேறுபட்டவர்களே தவிர இனத்தால் ஒன்றுபட்டவர்கள்தான். தமிழ் நாட்டில் உள்ள எந்த முஸ்லிமுமே மனதளவில் கூட பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருக்கமாட்டான். எங்கள் அயலில் உள்ள எல்லாரும் குமே இது நன்கு தெரியும். நீங்கள் கேட்பதிலும் நியாயம் இருக்கிறது. உங்கள் சிலோனிலுள்ள சில முஸ்லிம்களுக்கு தாங்கள் தமிழர்கள்தானா என்ற விஷயத்தில் ஒரு சந்தேகம் இருக்கிறது. அங்கே இரண்டு வகையான முஸ்லிம்கள் இருக்கிறார்கள். பணக்கார முஸ்லிம்கள்தான் சுயலாபம் கருதி ஒரு மாதிரியான அரசியல் பேசுகிறார்கள். கடைச் சிப்பந்திகளாகவும், சிறு வியாபாரிகளாகவும், தோட்டத் தொழிலாளர்களாக ளாகவும் இருக்கின்ற ஏழை முஸ்லீம்களைப் பற்றி அந்தப் பணக்கார முஸ்லிம்கள் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. எனக்கு இலங்கை அரசியல் நன்கு தெரியும். எங்கள் கடையிலேகூட இலங்கையிலிருந்து வந்த முஸ்லீம் ஒருவர் வேலை பார்க்கிறார். அவர்கள் எல்லோரும் மறுபடியும் இங்கே வந்து குடியேறுவ



தைத்தான் விரும்புகிறார்கள். இங்கே நாளுக்கு நாள் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. ராமநாதபுரம் மதுரை ஜில்லா முஸ்லிம்கள் மத்தியிலே சிலோனுக்கு இருந்த மௌசு இப்போது எவ்வளவோ குறைந்து விட்டது'' என்றார் அவர்.

''இங்கே கருணாநிதியின் ஆட்சி எப்படி இருக்கிறது?'' என்று நான் அவரைக் கேட்டேன்.

''தி. மு. க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பிருந்தே நாங்கள் எல்லாம் தி. மு. க. தான்! இங்கேயுள்ள முஸ்லிம் லீக் கட்சியைக் காட்டிலும் திமுக வில் அதிக முஸ்லிம்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். கருணாநிதி ரொம்பக் கெட்டிக்காரத்தனமாக ஆட்சி செய்கிறார். நீங்கள் வேண்டுமானால் உங்கள் பயணத்தின் போது எங்கெங்கு போகிறீர்களோ அங்கங்கெல்லாம் சந்திக்கின்ற சாதாரண மக்களைப் பார்த்து ''கலைஞரின் ஆட்சி எப்படி இருக்கிறது?'' என்ற கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். உங்களுக்கே உண்மை தெரியும். மத்தியில் இன்னும் பல ஆண்டுகளுக்கு இந்திரா காந்தி எவ்வளவு உறுதியாக நிலைத்து இருக்கப்போகிறாரோ அவ்வளவு உறுதியாக இங்கே கலைஞர் நிலைத்து இருக்கப் போகிறார். கலைஞரின் ஆட்சியை யாருமே அசைக்க முடியாது. கலைஞர் பக்கம் தான் மக்கள் இருக்கிறார்கள்'' என்றார் இப்ராஹிம்.

திமுக மீதும் கலைஞர் கருணாநிதி மீதும் அந்த இளைஞருக்கு இருந்த பற்றுதலைக் காண எனக்கு வியப்பாக இருந்தது.

3 திருச்சி, தஞ்சாவூர், சென்னை, பெங்களூர், சேலம்-நான் சென்ற எல்லா இடங்களிலுமே நிறைய ஆப்பிளும் கிரேப்ஸும் கிடைத்தன. விலையும் மலிவாக இருந்தது. பழங்களும் சுவையாக இருந்தன. பழக்கடைகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆப்பிளையும் கிரேப்ஸையும் பார்த்தபோது அந்த நாட்களில் அவுஸ்திராலியாவிலிருந்து இறக்குமதியாகி கொழும்பு கோட்டை ரயில்வே ஸ்டேஷனுக்கு முன்னுள்ள கடைகளில் நிறைந்து கிடந்த ஆப்பிளும் கிரேப்ஸும் ஒரு கனவுபோல எனக்குத் தெரிந்தன.

4 திமுக ஆட்சியில் வசதிகள் பெருகி ஏழை மக்களின் வாழ்வில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது போலவே தெருவுக்குத் தெரு இருக்கும் சிலைகளின் எண்ணிக்கையும் பெருகி இருக்கிறது.

மெரீனா கடற்கரை கலை மயமாக இல்லாமல் ஒரே சிலை மயமாக இருக்கிறது.

எதற்கெடுத்தாலும் சிலை வைக்கும் வழக்கத்திற்கு தி மு க ஆட்சியினர் எவ்வளவு விரைவில் முற்றுப்புள்ளி வைக்கிறார்களோ அவ்வளவுக்கு நல்லது.

மக்களுக்கு இந்தச் சிலை விஷயங்கள் சலிப்புத் தட்டத் தொடங்கி விட்டன.

5 தமிழ் நாட்டில் வெளியாகும் தமிழ் தினசரிப் பத்திரிகைகளில் 'தினத்தந்தி'யும் 'தினமணி'யும் தான் மிக அதிகமாக விற்பனை ஆகின்றன. 'தினமணி'யைக் காட்டிலும் 'தினத்தந்தி'யின் விற்பனை அதிகம்.

இந்த இரண்டு தினசரிப் பத்திரிகைகளையும் தவிர இன்னும் பல தினசரிப் பத்திரிகைகள் தமிழ் நாட்டில் வெளியாகின்றன. பல புதிய தினசரிகளும் தோன்றி இருக்கின்றன.

தி மு க தினசரிகளில் 'முரசொலி" நல்ல செல்வாக்கோடு விளங்குகிறது.


தி மு க வைத் தாக்கும் தினசரிகளில் 'நவசக்தி' முதலிடம் வகிக்கிறது.

நான் சென்னையில் நின்ற போது ''அகண்ட தமிழகம் அமைக்க கருணாநிதியும் செல்வநாயகமும் திட்டம் போடுகிறார்கள்'' என்ற தலைப்பில் இலங்கைத் தினசரி ஒன்றில் வெளியான செய்தியை ''நவசக்தி'' மறு பிரசுரம் செய்திருந்தது!

6 தஞ்சாவூரிலிருந்து வந்து நாட்கள் பலவாகிவிட்ட போதிலும் மாலை நேரத்தில் அந்த நகர் முழுவதும் மணக்கும் மல்லிகையின் மணத்தை என்னால் இன்னமும் மறக்க முடியவில்லை. பொதுவாகவே தமிழ்நாடு முழுவதிலுமே பெண்கள் கூந்தலில் நிறைய மலர்களை அணிந்து இருப்பார்கள். தஞ்சாவூரில் இந்த வழக்கம் இன்னும் அதிகம். அங்கே மலர்களுக்கு நடுவில் பெண்களின் தலை இருக்கும். அதிலும் மல்லிகை மலரை அணிபவர்கள் தொகை தஞ்சாவூரில் மிக அதிகம், மாலை நேரத்தில் தஞ்சாவூர் நகரம் முழுவதுமே மல்லிகையின் மணம்தான் வீசிக் கொண்டு இருக்கும்.

7 தமிழ் நாட்டில் பல புதிய சஞ்சிகைகள் இப்போது பிரசுரம் ஆகின்றன. மலிவு விலை நாவல்களும் ஏராளமாகப் பிரசுரம் ஆகின்றன. இந்தச் சஞ்சிகைகளிலும் நாவல்களிலும் பெரும்பாலானவை படு ஆபாசமாக இருக்கின்றன. இவற்றில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் விஷயங்களைக் காட்டிலும் படங்கள் ஆபாசமாக இருக்கின்றன.

இந்தச் சஞ்சிகைகளையும் நாவல்களையும் நடைபாதையில் போட்டு வியாபாரம் செய்கிறார்கள், அவற்றில் குறிக்கப்பட்டிருக்கும் விலையைக் காட்டிலும் குறைந்த விலைக்கு இவற்றை நடைபாதையில் வாங்கக்கூடியதாக இருக்கிறது.



8 சென்னையில் ஒரு கூட்டத்தில் 'சோ'வைப் பார்த்தேன். தலையை முற்றாக மொட்டை அடித்துக் கொண்டிருக்கிறார். இவர் கூட்டத்திற்கு வந்ததும் ரசிகர்கள் ஏகக் கூச்சல்போட்டு மிகவும் ஆரவாரமாக இவரை வரவேற்றார்கள்.

இந்தக் கூட்டத்தில் நின்றபோது மைலாப்பூரிலுள்ள ஒரு 'நியூஸ் ஏஜன்ட்' தெரிவித்த கருத்துக்கள் எனது ஞாபகத்துக்கு வந்தன.

பொதுவாக தமிழ் நாட்டில் வெளியாகும் பத்திரிகைகளைப் பற்றியும் அவற்றின் விற்பனையைப்பற்றியும் அந்த நியூஸ் ஏஜன்டுடன் பேசிக்கொண்டிருந்தேன்.

அப்போது அவர் 'சோ'வின் ''துக்ளக்'' பத்திரிகை மிகவும் நன்றாக விற்பனையாவதாகத் தெரிவித்தார்.

''சர்க்குலேஷன் லட்சத்தையும் தாண்டிவிட்டது'' என்றார் அவர்.

சோவின் பேச்சும் எழுத்தும் மட்டுமல்ல, 'சோ' விடும் ஒவ்வொரு மூச்சுமே கருணாநிதிக்கு எதிராகத்தான் இருக்கிறது.

இன்று தமிழ் நாட்டில் கருணாநிதிக்கு எதிராக பிரச்சாரம் செய்வதில் முதல் நம்பர் பேர்வழியாக 'சோ'தான் இருக்கிறார்.

'சோ'வுக்கு கிடைத்த வரவேற்பைப் பார்த்ததும் 'இவருக்கு இவ்வளவு வரவேற்பு இருக்குமேயானால் கருணாநிதிக்கு நாளுக்கு நாள் எதிர்ப்பு வலுத்துக்கொண்டு வருவதாகத்தானே பொருள் கொள்ள வேண்டும்' என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்.

கூட்டத்தில் எனக்குப் பக்கத்தில் இருந்தவரிடம் பேச்சுக் கொடுத்தேன். அவர் 'சோ'வின் பரம ரசிகனாக காட்சி தந்தார். அவர் ஒரு 'பாங்'கில் வேலை செய்பவர். ராதாகிருஷ்ணன் என்று பெயர். பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர். வயது முப்பதுக்குமேல் முப்பத்தி ஐந்துக்குள் இருக்கும்.

'சோ'வைப் பற்றி அவர் மிக நல்ல அபிப்பிராயம் தெரிவித்தார். அவரது பேச்சிலிருந்து 'சோ' அவரை எவ்வளவு தூரம் கவர்ந்திருக்கிறார் என்பதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

நான் அவரைப் பார்த்து ''நீங்கள் எதற்காக தி. மு. க. ஆட்சியை எதிர்க்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

அவர் திடுக்கிட்டு என்னை வியப்புடன் நோக்கினார்.

''மிஸ்டர் வரதராசன்! நான் 'சோ'வைப் பற்றி நன்றா

கச் சொன்னதும் நீங்கள் என்னைத் தவருகப் புரிந்துவிட்டீர்கள் போலத் தெரிகிறது. நாங்கள் எல்லாருமே தி மு க ஆதரவாளர்கள்தான். 'சோ' சொல்லுகிற பாணியையும் சொல்லுகிற மாதிரியையும் சொல்லுகிற விதத்தையும் அவரது நகைச்சுவையையும் நாங்கள் ரசிக்கிருேமே தவிர அவரது கொள்கைகளை அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை! சென்ற தேர்தலின் போது 'சோ' பேசிய கூட்டங்களுக்கு ஏராளமான ஜனங்கள் வந்தார்கள்! அவ்வளவு பேரும் சோவின் கொள்கைகளை ஆதரித்தவர்களாக இருந்திருந்தால் இப்போது தி மு க பதவியில் இருக்காது! அதெல்லாம் சும்மா வேடிக்கை பார்க்க வந்த கூட்டம்! இப்பவும் அது தான் நடக்கிறது'' என்ருர் ராதாகிருஷ்ணன்.

அந்தக் கூட்டத்திலிருந்து பஸ் நிலையம் வரைக்கும் நானும் அவரும் பேசிக்கொண்டே வந்தோம்.

''பொதுவாக பிராமண சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தி மு க ஆதரவாளர்களாக இருக்கமாட்டார்கள் என்பது எங்கள் ஊரில் உள்ள ஒரு அபிப்பிராயம். நீங்கள் பிராமண சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தும் தி மு க ஆட்சியை ஆதரிப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது'' என்று நான் அவரிடம் சொன்னேன்.

''நீங்க சொல்வது வாஸ்தவந்தான். ஒரு காலத்தில் நிலைமை அப்படித்தான் இருந்தது. ஆனல் இப்போ மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி அதிகமாகிவிட்டது; காமராஜர் ஆட்சி செய்தபோது காங்கிரஸ் கட்சிதான் ஆட்சி செய்தது. என்ருலும் ஏராளமான பிராமண துவேஷம் அந்த ஆட்சியில் இருந்தது; மந்திரிகளிலேயே பலர் பிராமண துவேஷிகளாக இருந்தார்கள். ஆனல் இப்போது நிலைமை அப்படியில்லை. இப்போதுள்ள மந்திரிகளில் யாருமே பிராமண துவேஷிகள் இல்லை. இப்போது பிராமணர்களிலேயே நிறையப் பேர் தி மு க உறுப்பினர்களாக இருக்கிருர்கள், இந்த ஆட்சி ஏழை மக்களுக்கும் எங்களைப் போன்ற மத்தியதர வர்க்கத்தினருக்கும் எவ்வளவோ நன்மைகளைச் செய்து தந்திருக்கிறது—

—ராதாகிருஷ்ணனின் பேச்சு ஒரு அரசியல் வாதியின் பேச்சைப்போல இருந்தது. தி. மு. க. ஆட்சியின் சாதனைகளை பட்டியல் போட்டு அவர் ஒப்பித்தபோது எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது.

''சோ விடும் மூச்சு ஒவ்வொன்றும் கருணாநிதிக்கு எதிராக இருப்பது உண்மைதான். ஆனல் கடைசியில் பெருமூச்சு விடப்போறவரும் அவர்தான்!'' என்ருர் ராதாகிருஷ்ணன்.

9 தஞ்சாவூரில் ராஜராஜசோழன் சிலைத் திறப்பு விழா நடைபெற்றது.

தி. மு. க பிரமுகர்கள் அத்தனைபேருமே இந்த விழாவில் கலந்து கொண்டிருந்தார்கள்.

லட்சத்துக்கும் அதிகமான மக்கள். பார்த்தால் கண்ணுக்குத் தெரிகிற அத்தனை இடத்திலும் மனிதத் தலைகளாக—இந்த விழாவைப் பார்ப்பதற்காக தஞ்சாவூரில் வந்து குழுமியிருந்தார்கள்.

தி. மு. க. தலைவர்களைத் தவிர ம. பொ. சி, குன்றக்குடி அடிகளார், ஔவை டி. கே. சண்முகம் போன்றவர்களும் இங்கே வந்திருந்தார்கள்.

தஞ்சாவூர் கோயில் மிகவும் சரித்திர கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருக்கின்றபடியால் அந்தக் கோயிலில் ஒரு செங்கல் இடிந்து விழுந்தால்கூட அதனைத் திருத்துவதற்கு மாநில அரசுக்கு அதிகாரம் கிடையாது. அந்தக் கோயிலில் நிர்வாகம் முழுவதும் மத்திய அரசின் கையிலேயே இருக்கிறது.

இதன் காரணமாக,

அங்கு நிறுவப்பட்டுள்ள ராஜராஜ சோழன் சிலைகூட கோயிலுக்குள்ளே நிறுவப்படாமல் கோயிலுக்கு வெளியே தான் நிறுவப்பட்டு இருக்கிறது.

கோயிலுக்கு உள்ளே சிலை வைக்க மத்திய அரசு மறுத்து விட்டது.

சிலைத்திறப்பு விழாவில் பேசிய எல்லாப் பேச்சாளர்களுமே இந்த அநீதியையும் மிகவும் தெளிவாகவும் சாதுரியமாகவும் சுட்டிக்காட்டித்தான் பேசினார்கள்.

பிரச்சார தந்திரங்களில் மிகவும் கைதேர்ந்தவர்களான திமுக தலைவர்கள் ராஜராஜ சோழன் சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சியையும் தங்களது மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவு தேடும் ஒரு மேடையாகவே பயன்படுத்தினார்கள். செய்த காரியத்தை மிகவும் செம்மையாகச் செய்தார்கள்.



இந்த விழாவில் பேசிய பேச்சாளர்களின் பேச்சுக்களில் நெடுஞ்செழியனின் பேச்சுத்தான் மற்றெல்லாரது பேச்சுக்களையும் விடச் சிறந்ததாக மறக்க முடியாததாக இருந்தது.

பல்வேறு ஆராய்ச்சியாளர்களின் முடிவுகளையெல்லாம் தொகுத்து ராஜராஜ சோழனின் அருமை பெருமைகளையெல்லாம் இவர் வர்ணித்த போது கேட்டுக்கொண்டிருந்த ஒவ்வொரு தமிழனின் இதயமும் பெருமிதத்தால் விம்மியது.

ராஜராஜ சோழன் சிலை மிகுந்த கலையழகுடன் பொலிகின்றது. சிலையை நிறுவியுள்ள அடிக்கல்லின் நாலுபக்கங்களிலும் வாசகங்கள் பொறித்திருக்கிறார்கள். சிலையைத் திறந்து வைத்தவர் பெயர், அதற்கு ஆதரவாக, காரணமாக இருந்தவர்களின் பெயர்களை முதல் மூன்று பக்கங்களிலும் பொறித்திருக்கிறார்கள். நாலாவது பக்கத்தில், ''இந்தச் சிலையைக் கோயிலுக்குள் வைக்க மத்திய அரசு அனுமதி மறுத்ததால், இந்த இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது'' என்று எழுதியிருக்கிறார்கள். "இந்தச் சிறிய விஷயத்துக்குக் கூட மாநிலத்துக்கு அதிகாரமில்லையே' என்ற விஷயத்தை ராஜராஜன் சிலையைப் பார்க்கிறவர்களுக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். பிரச்சார விளம்பரத்தில் திமுகவுக்கு இணை தி. முக தான்.

**கவிஞர் கண்ணதாசனுக்கும் வெள்ளி விழா! அவர் சினிமாவுக்கும் பாடல் எழுதத் தொடங்கி 25 ஆண்டுகளாகி விட்டன, இந்தச் சந்தர்ப்பத்தையொட்டி, கண்ணதாசனே ஒரு பரிசுத் திட்டத்தை வெளியிட்டிருக்கிறார். அவருடைய அரசியல், கவிதைகள், திரைப்படப் பாடல்கள் — இந்த மூன்று துறை குறித்தும் தனித்தனியாக வாசகர்கள் விமர்சனம் எழுதி அனுப்பவேண்டும். ஒவ்வொரு துறையிலும் சிறந்த விமர்சனத்துக்கு கண்ணதாசன் தனித்தனி ஆயிரம் ரூபா பரிசு கொடுக்கவிருக்கிறார். இந்தப் பேட்டி 'சோ'வின் 'துக்ளக்' பத்திரிகையின் அனுசரணையுடன் நடக்கிறது. — கண்ணதாசன் வழி ஒரு தனி வழிதான்!**



10 தமிழ் நாட்டிலும் பெங்களூரிலும் உள்ள சினிமாத் தியேட்டர்கள் வெகு சுத்தமாக இருக்கின்றன. பெங்களூரில் உள்ள சினிமாத் தியேட்டர்களைக் காட்டிலும் சென்னையில் உள்ள சினிமாத் தியேட்டர்கள் வசதி மிக்கனவாயும் அழகானவையாகவும் இருக்கின்றன.

11 கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் திறந்ததனால் பெருத்தமாற்றங்கள் ஏதாவது ஏற்பட்டிருக்கின்றனவா என்று பார்த்தேன். வெளிப் பார்வைக்கு அப்படி ஒன்றும் தெரியவில்லை. தமிழ்நாட்டிலுள்ள சில பிரபலமான ஹோட்டல்களில் 'பார்' என்ற ஒரு புதிய பகுதி சேர்த்திருக்கிறது. அவ்வளவுதான்.

12 சென்னையிலுள்ள புத்தகக் கடை ஒன்றினுள் நுழைந்து சிறிது நேரம் நோட்டம் விட்ட பின்னர் ''புத்தக விற்பனை எப்படி இருக்கிறது? லாபகரமானதாக இருக்கிறதா? என்ற கேள்வியை அந்தக்கடை நிர்வாகியிடம் கேட்டேன்.

அவர் பாடிய பஞ்சப் பாட்டைக் கேட்க ரொம்பவும் பரிதாபமாக இருந்தது.

''ஒவ்வொரு கிழமையும் சினிமா பார்ப்பதற்காக ஏழெட்டு ரூபாய் செலவழிப்பவர்கள் கூட மாசத்தில் இரண்டு ரூபாய் கொடுத்து ஒரு புத்தகம் வாங்க மாட்டேனென்கிறார்களே!'' என்றார் அவர்.

எல்லா இடங்களிலுமே புத்தக வியாபாரப் பிரச்சினை இப்படித்தான் இருக்கும்போலும் என்று நினைத்துக்கொண்டேன்.

ஆனால் சிறிதுநேரம் அவருடன் பேசிக்கொண்டிருந்த போது நிச்சயமாக யாழ்ப்பாணத்தைக் காட்டிலும் தமிழ்நாடு எவ்வளவோ பரவாயில்லை என்றுதான் நினைக்கத் தோன்றியது.

இங்கே படித்தவர்கள் (?) தொகை அதிகம். புத்தகங்கள் வாசிக்கும் பழக்கத்தைக் வளர்த்துக் கொள்ளாத படித்த மனிதர்கள் இவர்கள்! அதனால் இங்கே புத்தக விற்பனை குறைவாக இருக்கிறது.

அங்கோ—

படித்தவர்களின் தொகையே குறைவாக இருக்கிறது!

அங்கு ஓரளவு படித்தவர்களிடத்திலும்கூட நிறையவாசிக்கும் பழக்கம் இருக்கிறது!

[அடுத்த இதழில் முடியும்]

## தரமான ஓவியங்களுக்கு ஒரு "தரன்"

'தரன்' அமைக்கும் அட்டைப்பட ஓவியங்கள் கவர்ச்சியாக வும் அழகாகவும் இருக்கின்றன. தென்னிந்திய பத்திரிகை ஓவியர் களுக்கு சற்றும் குறையாத விதத்தில் பத்திரிகைகளின் அட்டைப் படத்தை அமைப்பதில் ஆற்றல் மிகுந்த ஒரு ஓவியர் யாழ்ப் பாணத்தில் இருப்பதைக்காண மகிழ்ச்சி!

பேராதனை. —ரத்தினம்

## விலை குறைவு

'வெள்ளி'யை ஒழுங்காக வாசித்து வருகிறேன். என்னை மிகவும் கவர்ந்திருக்கிறது. ஒவ்வொரு பக்கமும் என்னை கவர்ந்து இழுக் கின்றது. ஈழத்தில் வெளியாகும் தமிழ் ஏடுகளில் நிறைந்த விஷ யங்களுடன் மிகவும் குறைந்த விலையில் வெளிவரும் ஒரேயொரு சஞ்சிகை 'வெள்ளி' என்பதையும் அறிவுறுத்த விரும்புகிறேன்.

நுணுவில் மேற்கு ஆர். ஜே. ரஞ்சித் சிங்

## ஒரு சிறு கலைக்களஞ்சியம்

பலர் 'வெள்ளி'யை முற்பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை வாசிப்பதாக எழுதியிருந்தீர்கள். நான் சில சமயங்களில் வெள்ளி பழைய இதழ்களை வைத்துக்கொண்டு மீண்டும் மீண்டும் அசைபோடுவதுண்டு. மிகவும் சுருக்கமாகச் சொன்னால் 'வெள்ளி' ஒரு சிறு கலைக்களஞ்சியம் போல!

கேள்வி பதில் சுவையாகவும் சிறப்பாகவும் இருக்கின்றது.

தெகிவளை —நா. நகுலேந்திரன்

## வெற்றிப் பாதை

தென்னிந்தியாவிலிருந்து வரும் ஏடுகளைத் தடைசெய்வதன் மூலம்தான் நமது ஏடுகளை வளர்க்கமுடியுமென ஒரு சிலர் கூறும் இவ்வேளையில், தென்னிந்தியாவிலிருந்து ஏடுகள் இறக்குமதியா கும் அதே வேளையில் நம்மால் அவைகளை மிஞ்சக்கூடிய ஏடுகளைத் தோற்றுவிக்க முடியும் வெற்றிப்பாதையில் செல்ல முடியுமென்ப தற்கு 'வெள்ளி' தக்கதொரு சான்றாகும்.

இன்று இலங்கையில் வெளியாகும் ஏடுகளில் நடுநிலையான தும், தமிழ் இன உரிமைக்காக குரல் எழுப்புவதுமான ஒரே யொரு ஏடு 'வெள்ளி' என்பதில் சந்தேகமில்லை.

தலைவர், உரும்பிராய் கலை — இ. பகீரதன்
கலாச்சார பாதுகாப்பு கழகம்!

## கருத்துக்கு விருந்து தரும் கைலாசபதி

'மண்ணுலகத்து ஓசைகள்' என்ற மிகவும் அருமையான தலைப் பில் கலாநிதி கைலாசபதி எழுதிவரும் கட்டுரைகள் கருத்துக்கு விருந்தாக இருக்கின்றன. தெளிவான சிந்தனையும் இயல்பான தமிழ் நடையையும் கொண்ட இவரது எழுத்துக்களைப் படிக்கும் வாச கர்கள் இவரது 'பக்தர்' களாகவே மாறிவிடும் ரகசியம் எனக்கு இப்போதுதான் விளங்குகிறது. இந்தக் கட்டுரைகள் தொகுக்கப் பட்டு புத்தகமாக வெளிவரவேண்டும் என்பது எனது விருப்பம்.

பேராதனை. — ஆர். ஸ்ரீதரன்

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்
அச்சுப்பதிவு: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

VELLI—*Tamil Bi-Monthly* Vol. 2 No 3 1-6-72

"இலக்கியமும் திறனாய்வும்"

கலாநிதி க. கைலாசபதி

விலை ரூபா 3-80 (தபாற்செலவு சதம் 60)

வரதர் வெளியீடு, 226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

# இலக்கியமும் திறனாய்வும்

இலக்கியக் கொள்கைகளையும் திறனாய்வுக்கோட்பாடுகளையும், தமிழிலக்கியம் கற்பிக்கும் ஆசிரியனது நோக்கு நிலையிலிருந்து விவரிக்கும் முதலாவது தமிழ் நூல் இது. இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சிரேஷ்ட தமிழ் விரிவுரையாளராகிய கலாநிதி க. கைலாசபதி எமது இலக்கியக் கல்வியிற் காணப்படும் குறைபாடுகள் பலவற்றை நுணுகி உள்நோக்கி அவற்றுக்குப் பரிகாரமும் கூறியுள்ளார்.

**இலக்கியமும் திறனாய்வும்** மூன்று கட்டுரைகளைக் கொண்டது. பள்ளிக்கூட ஆசிரியரையே சிறப்பாக உளங்கொண்டு இவை எழுதப்பட்டனவாயினும், இலக்கியக் கல்வி திட்பமும் நுட்பமும் செறிந்து விளங்கவேண்டுமென்னும் நோக்கத்தை உடையனவாகையால், ஆசிரியர்-மாணாக்கருக்கு மாத்திரமன்றி பொதுவாக இலக்கிய ஆர்வமுடையவருக்கும் கிளர்ச்சியூட்டுவனவாய் உள்ளன.